முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 739**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.10.2021, வியாழக்கிழமை

1. ஆறுமுகன் என் மகா சூட்சுமமாகி
அண்டத்தை காத்திட மாதவசியாக
தர்மத்தை பெருக்கி கலியுகத்தை
தர்மலோகமாக ஆக்கி காத்தருளவந்த அரங்கனே
2. அரங்கனே எந்தன் அவதாரமே
அற்புதம்பட உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
வரமென பிலவ நங்கை திங்களில்
வழங்குவேன் சுப்ரமணியப்பெருமான் யானும்
3. யானுமே அரங்கனுள் சக்தியூட்டி
ஞானச்சுடராக ஞானமகா சக்தியாக
வானவர்கள் வியக்க வரம் கூட்டிவர
வந்து அரங்கன் தடம் கண்டு செல்பவர்க்கு
4. செல்பவர்க்கு அந்த ஞானத்தின் மகா சக்தி
நாட்டிடுவேன் சர்வபலமாய் மாறி இனிதே
தானவர்கள் வாழும் தவபலம் பெற்ற நிலையாய்
தரணியில் உயர்ந்து சித்தி காணக்கூடும்
5. கூடவே இந்த அற்புதத்தை குரு அரங்கனை கொண்டு
குவலயத்தார்க்கு தீட்சையாக யானே அருளிவர
நாடி அரங்கஞானி தடத்தில்
ஞானமெனும் உயர் தீட்சை பெற்றுவரும் மக்களெல்லாம்
6. மக்களெல்லாம் மகா ஞானிகளாகி
மண்ணுலகை காக்கவல்ல மகா சக்திகளாகி
ஆக்கமுடன் அரங்கன் வழி தேற்றம் பெறுவர்
அகிலத்தை மாற்றும் ஞானிகளாக மாறி அற்புதம் படைப்பர்

ஞான அறிவுரை ஆசிமுற்றே

–சுபம்–